1993 ஏப்ரல் 16]

யுத்தரவு இருந்தால் அதுவும் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதையெல்லாம் போக்குகின்ற வகையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கட்டிடங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டப்படுவதற்காக வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின்படி பல குடியிருப்புக் கட்டிடம் கட்டுபவர்களிடமிருந்து ஈட்டுத் தொகை வசூல் செய்கின்றோம். அனுமதி அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்குமேயானால் அந்த ஈட்டுத் தொகை திருப்பி அளிக்கப்பட மாட்டாது என்ற விதியும் இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அப்படி அனுமதி இல்லாமல் கட்டப்படுகின்ற கட்டிடங்கள் மின்சார வாரியத்திற்கோ அல்லது குடிநீர் வழங்கல் வாரியத்திற்கோ செல்லுகின்ற பொழுது, திட்ட அனுமதி பெற்றிருந்தால்தான் அவர்களுக்குக் குடிநீர் இணைப்பும், மின்சார இணைப்பும் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏற்கனவே சட்டத்தில் விதிமுறை இருக்கின்ற காரணத்தினால் தற்போது இருக்கின்ற நிலையே போதுமானது என்று துறை கருதுகின்றது.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி பாமர மக்களின் பணம் அதிக அளவிற்கு விரயமாவதைத் தடுக்கும்பொருட்டு, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் விளம்பரங்கள் மூலமாகவும், வானொலி, தொலைக்காட்சி மூலமாகவும் மக்களுக்கு அறிவுரை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதிக்கு முரணாகக் கட்டிடம் கட்டப்படுகின்றபொழுதே நிர்வாகத்தின் வழியாக ஷோகாஸ் நோட்டீஸ் அனுப்பப்படுகின்றது. அந்த முறை ஏற்கனவே சட்டத்தில் இருக்கின்ற காரணத்தினால் அந்த அறிவிக்கையே போதும் எனக் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 378, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

378—

மலைக்குறவர் வகுப்பினரை ஆதிதிராவிடர் இனத்தில் சேர்த்தல்

*17147—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைக்குறவர் வகுப்பினரை ஆதிதிராவிடர் இனத்தில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1993 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்குறவர் பழங்குடியைச் சேர்ந்தவர்கள் மலைக்குறவர் பழங்குடி சலுகைகளைப் பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள். பழங்குடியினருக்கு அரசு சலுகைகள் அறிவித்தும் அந்தச் சலுகைகளைப் பெற பழங்குடியினர் பல பகுதிகளில் இருந்தும்கூட அரசின் சலுகைகளைப் பெறுவதற்கு ஜாதிச் சான்றிதழ் பெற முடியாத ஒரே காரணத்தினால் அரசின் சலுகைகளைப் பெற முடியாமல் பல்வேறு பகுதிகளில் பழங்குடியினர் அவதிப்படுகின்றார்கள். கிராம நல அலுவலர், வருவாய் அலுவலர், ஆய்வாளர் ஆகியோர் பரிந்துரை செய்தும் கூட வட்டாட்சியர் ஜாதிச் சான்றிதழ் கொடுக்க முடியாத பவர் இல்லாத காரணத்தினால் கோட்டாட்சியர் மூலம் ஜாதிச் சான்றிதழ் வாங்க வேண்டும் என்று இருக்கின்ற காரணத்தினால் விரைவில் ஜாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் துரித நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால் தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் அல்லாதவர்கள் பழங்குடியினர் ஜாதிச் சான்றிதழ் பெறுவதால் ஜாதிச் சான்றிதழ் வழங்குவதில் சிக்கல் இருப்பதாகக் கோட்டாட்சியர் அவர்கள் கூறுகின்றார்கள். அப்படியானால் ஆதிதிராவிடர் அல்லாதவர்கள் அதுபோன்ற ஜாதிச் சான்றிதழ் வாங்கி சலுகைகளைப் பெற்று அனுபவித்து வருகின்றனர் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவ்வாறு வந்திருந்தால் அரசு அவர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற புகார் இதுவரையில் வரவில்லை. அப்படி அரசுக்கு வருமேயானால் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் தவறு செய்தவர் யாராக இருந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 16]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலைக்குறவர்கள், தங்களுக்கு தற்போது கிடைக்கும் சலுகைகளை, அவர்கள் முழுவதும் பெற்றும்கூட, சமுதாயத்தில் குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் பெற முடியவில்லை. இந்தநேரத்தில் பழங்குடியினர் இனத்தில் இருக்கும் இவர்களை, தாழ்த்தப்பட்ட இனத்திற்கு மாற்றம் செய்வதால், இந்தச் சமுதாயம் மிகவும் பின்தங்கிவிடும் ; அவ்வாறு செய்யப்பட மாட்டாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றிதெரிவித்துக் கொள்வதுடன், மேலும் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும், குறவர், குறவன் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் இதேபோன்று இருக்கிறார்கள். அவர்கள், சமுதாயத்தில் குறிப்பிட்ட அளவு எந்த ஒரு முன்னேற்றமும் பெறாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருந்து, பழங்குடியினர் இனத்திற்கு மாற்ற அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசு எடுக்கவேண்டிய முடிவு என்பதால், இது மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 379, திரு. க. குப்பன், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

379—

மீனவர்கள் தொழில் செய்ய வழங்கப்பட்ட நீண்டகால கடன்களை தள்ளுபடி செய்தல்.

*9751— திரு. க. குப்பன் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களின் வாழ்வு மலர, தொழில் செய்ய அளிக்கப்பட்ட நீண்டகால கடன்களைத் தள்ளுபடி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?